மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மாதந்தோறும் செய்திப் படங்கள் எடுப்பது என்கின்ற முறையில் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவைகள் எல்லாம் நடைபெறுகின்ற நாட்டு நடப்புகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லக் கூடிய செய்திப் படங்கள். அதைத் தவிர, கருத்தை விளக்கக்கூடிய டாகுமெண்டரி என்ற பெயரில் மக்களுக்குத் தெரிவிப்பதற்காக சில திரைப் படங்கள் எடுப்பதுபற்றி சொல்லப்பட்டது. அதாவது குறிப்பாக, மதுவிலக்கு, தீண்டாமை, தொழிலாளர்கள் நலம், விவசாயிகள் பிரச்னை போன்ற பல்வேறு துறைகளைப் பற்றிய பொதுப் பிரச்னைகளை திரைப்படங்களாக எடுத்துக் காட்டுவது என்பது நடைமுறையில் இருந்து வருகிறது. இதை இன்னும் பலமானதாகவும், பயனுள்ளதாகவும் ஆக்க வேண்டுமென்று இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இன்றைக்கு சினிமா உலகமானது நல்ல கருத்துக்களை, சீர்திருத்தக் கருத்துக்களை, நாட்டினுடைய நல்ல செய்திகளை, அரசாங்கச் செய்திகளை விளம்பரமாக செய்யக்கூடிய ஒரு பெரிய சாதனமாகும். இதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனாலும் இந்த சினிமாத் துறையில் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்படுவதற்கான காரணம் என்ன? அதிலும் சினிமாத் துறையில் நல்ல அனுபவம் வாய்ந்த அமைச்சர் அவர்கள், இந்தத் துறையை நஷ்டமில்லாமல் காப்பாற்ற முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அரசு இந்த சினிமாத் துறையை தொழிலாக நடத்தவில்லை. அரசுக்கு பல்வேறு முக்கியமான துறைகளில் ஏற்படுகின்ற செலவைப்போல், இந்தச் செய்திகளைப் பரப்பக்கூடிய இந்தத் துறைக்கும் செலவு ஏற்படுகிறது. ஆனால், அரசு நடத்துகின்ற ஸ்டூடியோவில் நஷ்டத்தைத் தவிர்க்க முடியுமா என்ற கேள்விக்கு, பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. அதை நஷ்டமில்லாமல் நடத்துவதற்கு, கவர்ச்சியான திட்டங்களை திரைப் படத்துறைக்கு வழங்குவதன்மூலம், இந்த நஷ்டத்தை தவிர்ப்பதற்கான முயற்சிதான் இப்போது எடுத்துக் கொண்டிருக்கின்ற காரியமாகும்.

பட்டப்படிப்பு வகுப்புகளில் மாணவர்கள் எண்ணிக்கை.

* 287 வினா—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சா கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழகத்திலுள்ள தனியார் கல்லூரிகளில், பட்ட வகுப்புகளில் ஒவ்வொரு இடப்பிரிவிலும் 20 மாணவர்களாவது இருக்கவேண்டுமென்ற விதி உள்ளதா?

1978 பிப்ரவரி 27]

(ஆ) இந்த வருடம் பட்ட வகுப்புகளில் 20 பேருக்கும் குறைவானவர்களே சேர்க்கப்பட்டுள்ள கல்லூரிகள் சம்பந்தப் பட்ட மட்டில் இவ்விதியினை தளர்த்த உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) 1972–73 ஆம் ஆண்டிற்கு முன் துவக்கப்பட்ட பட்ட வகுப்புகளுக்கு 1977–78 ஆம் ஆண்டு இறுதிவரை மேற் சொன்ன விதி தளர்த்தப்பட்டுள்ளது. அதற்குப் பின்னர் துவக்கப் பட்ட வகுப்புகளுக்கு இவ்விதியிலிருந்து தளர்த்த உத்தேசமில்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும்போது ஒரு வகுப்பிலே 20-க்கும் குறைந்த மாணவர்கள் இருந்தாலும், அந்த வகுப்புக்கு அங்கீகாரம் தரப்பட்டு, மானியம் வழங்கப் படுகின்றது. ஆனால், தனியார் துறைக்கு இது நிறுத்தப்படு கிறது. இது தொடர்ந்து கொடுக்கப்படுமா ? உடல் மண் ணுக்கும், உயிர் தமிழுக்கும் என்று தமிழையே உயிர்மூச்சாக சொல்லிக்கொண்டிருக்கின்ற காலத்தில், அரபு, பர்சியா, உருது, சமஸ்கிருதம் போன்ற வகுப்புகளில் இரண்டு மாணவர்கள் இருந் தாலும் மானியம் கொடுக்கப்படுகின்றது. ஆனால், பிராஞ்சு 12 Branch XII என்று சொல்கின்ற தமிழில், 20-க்கும் குறைவான மாணவர்கள் இருந்தால், மானியம் தரப்படுவதில்லை, இது தவிர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தமிழைக் கற்றுக் கொள்வதற்கு, படிப்பதற்கு நிறைய வாய்ப் புக்கள் இருக்கின்றது. அது மட்டுமல்ல. மற்ற அரபு, பார்சி போன்ற மொழிகள் மைனரிட்டி என்கின்ற அடிப்படையிலே அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுகின்றன. அதுமட்டுமல்ல. நம்முடைய உயிர் தமிழுக்கு என்பதை, தமிழர்க்கு என்று சொல் வது நல்லது.

திரு. ரா. மார்க்கபந்து : கல்லூரிகளிலே ஒரு வகுப்பில் 40, 50 என்று மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். ஆகையால் சரியான கல்வி முறையை அவர்களுக்குப் போதிக்க முடியாத நிலையில் கல்வியின் தரம் குறைந்திருக்கிறது என்பது நம் அனை வருக்கும் தெரிந்த ஒன்று. ஆக, 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையில் ஆசிரியர்களை நியமனம் செய்து சிறந்த கல்வித் தரத்தை அளிக்க இந்த அரசிடம் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்கள் இன்றைய தினம் வேலை இழப்புக்கு ஆளாகும் நிலைமையில் இது போன்ற யோசனைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

VAYMAIYE VELLUM / TRUTH ALONE TRIUMPHS

[1978 பிப்ரவரி 27

திரு. துரை முத்துசாமி : கல்லூரிகளிலிருந்து இப்போது உயர்நிலைப் பள்ளிக்கு ஹையர் செகண்டரி கல்வி மாற்றப்பட்டிருக்கிறது. பல கல்லூரிகளில் சோதனைக் கூடங்கள் பயன்படாத நிலைமையும், கல்லூரி ஆசிரியர்கள் வேலை இழக்கும் நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேலை கொடுக்கும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்களைப் பயன்படுத்திக் கொள்ளவும், ஆய்வுக்கூடங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் ஏற்புடைய திட்டங்கள் நிச்சயமாக வகுக்கப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : வினாவிற்குரிய விடையிலிருந்து இந்த விதி தனியார் கல்லூரிகளுக்கு மட்டுந்தான் விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அரசு கல்லூரிகளிலும். பல்கலைக் கழக வகுப்புகளிலும் குறைந்த மாணவர்கள் இருந்தும் அனுமதிக்கப்படுகிறார்கள். எனவே, இவ்வாறு தனியார் கல்லூரியும் அனுமதிக்கப்படுமா ? மறு பரிசீலனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு செலவு செய்கிற பணம் போதிய பயனை விளைவிக்கவேண்டும்; அதிலே சிக்கனமாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்த விதியைப் பல்லாண்டுக் காலமாக நடைமுறைப் படுத்தி வருகிறார்கள். அந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினையை அணுகுவது நல்லது என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : புதிதாக அறிவிக்கப்பட்ட ஹையர் செகண்டரி கல்வி முறை காரணமாக உயர்நிலைப் பள்ளியிலிருந்து வெளியேறும் மாணவர்கள் அதிகமான பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அதிகமாகப் புதிய ஹையர் செகண்டரி பள்ளியை ஆரம்பிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உண்டு.

தட்டெழுத்தர்களுக்கு வேலைவாய்ப்பு.

* 288 வினா— திரு. ரெ. வி. சவுந்திரராஜன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்சமயம் தட்டெழுத்து English Higher, Tamil Higher ஆக இரண்டும்பாஸ் செய்து எத்தனைபேர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவுசெய்து, வேலைஇல்லாமல் இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 30—11—1977 அன்றைய நிலவரப்படி 9,608 பேர்கள்.